470/89

தொல்காப்பியப் பொருளதிகார ஆய்வு

நாவலர் சோமசுந்தர பாரதியார்

நினைவுச் சொற்பொழிவு

சொற்பொழிவாளர்:

பேராசிரியர் க. வெள்ளைவாரணர்

நாள் :

6—7—1987

முற்பகல் 11—00 மணி

...கலைக் கழகம்

0-6-97.
N87
133044

நாவலர் சோமசுந்தர பாரதியார்

நினைவுச் சொற்பொழிவு

(திருமதி வசுமதி பாரதி,
டாக்டர் சோமசுந்தர பாரதியார் அறக்கட்டளை)

நிறுவியோர்:

திருமதி மீனாட்சி
டாக்டர் திருமதி லலிதா காமேசுவரன்

சொற்பொழிவாளர்:

பேராசிரியர் க. வெள்ளைவாரணர்

INFORMATION & TOURISM D...
FORT ST GEORGE, MADRAS-9

நாள்:
6—7—1987
முற்பகல் மணி 11—00

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

O,6:9
N87

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
133044
சென்னை-600 008.

பேராசிரியர் டாக்டர் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்
அவர்களது

தொல்காப்பியப் பொருளதிகார ஆய்வு

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் மாண்புமிகு துணைவேந்தர் முது முனைவர் ச. அகத்தியலிங்கனார் அவர்களே, பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர்களே, பேராசிரியர்களே, தமிழ்ப்பெரு மக்களே, நண்பர்களே, இங்கு வருகை தந்துள்ள பெருமக்களே! அனைவர்க்கும் எனது உளமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்நலம் வளர்த்த பேராசிரியர் டாக்டர் நாவலர் ச. சோம சுந்தர பாரதியார் அவர்கள், நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த எட்டயபுரத்தில் கி. பி. 1879 சூலை 27-இல் சு ப் பி ர ம ணி ய நாயகர்க்கும் அவர்தம் மனைவியார் முத்தம்மாள் அவர்களுக்கும் மைந்தராகப் பிறந்தார். சத்தியானந்த சோமசுந்தரம் என்னும் இயற்பெயருடைய இவர், எட்டயபுரம் அரண்மனையில் நன்கு பேணிவளர்க்கப் பெற்றார்; திருநெல்வேலி சர்ச் மிஷன் உயர் பள்ளியிலும் அதனுடன் இணைந்த கல்லூரியிலும் பயின்று இடை நிலை வகுப்பில் தேர்ச்சிபெற்றார். பின்னர்ச் சென்னைக் கிறித்தவக் கல்லூரியிற் பயின்று இளங்கலை (பி. ஏ) வகுப்பில் தேறினார். பின்பு சட்டக்கல்லூரியிற் சேர்ந்து 1905- இல் சட்டத்தேர்வெழுதி

வெற்றிபெற்றார். 1913- இல் தாமே தமிழ் பயின்று ஆய்வுக்கட்டுரை வரைந்து முதுகலை (M.A) வகுப்பில் தேர்ச்சி பெற்றார். எட்டய புரத்தில் தோன்றிய இவரும் அவ்வூரிற் பிறந்த தேசியகவி சுப்பிரமணிய பாரதியாரும் இணைபிரியா நண்பர்கள். தமிழ் நூல்களை ஆர்வத்துடன் படித்து மகிழ்வதிலும் பாரதநாடு வெள்ளையராட்சியினின்றும் விடுதலை பெறவுழைக்கும் நாட்டுத் தொண்டிலும் இவ்விருவரும் ஒருங்கிணைந்து உழைத்தார்கள். தேசத்தொண்டர் வ. உ. சிதம்பரனார் அவர்கள் அரிதின் முயன்று நடத்திய கப்பல் கம்பெனியின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தியவர் சிறந்த வழக்கறிஞராகத் திகழ்ந்த சோமசுந்தர பாரதியார் அவர்களே யாவர்.

தமிழ் நிலைபெற்ற மதுரை மாநகரில் வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கிய சோமசுந்தர பாரதியார் அவர்கள், அந்நகரிற் பாண்டித்துரைத்தேவர் அவர்களால் நிறுவப் பெற்ற மதுரைத் தமிழ்ச் சங்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டார். தமிழிற் பெரும் புலமைபெற்ற அருணாசலக் கவிராயர், சுப்பிரமணியக் கவிராயர், கந்தசாமிக் கவிராயர், இலக்கணப் பெரும்புலமை ஆசான் சோழவந்தான் அரசஞ் சண்முகனார், பண்டிதமணி கதிரேசச் செட்டியார், செந்தமிழ்ப் பத்திராதிபர் திருநாராயண ஐயங்கார் முதலிய பெரும்புலவர்களுடன் பழகித் தொல்காப்பியம், சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் முதலிய உயர்ந்த தமிழ் நூல்களைக் கற்றுத் தெளிந்த செந்தமிழ்ப் புலமைச் செல்வ ராகத் திகழ்வாராயினர்.

மதி நுட்பமும் நூலறிவும் வாய்க்கப்பெற்று மதுரையிற் பெரும் பொருள் ஈட்டும் சிறந்த வழக்கறிஞராக விளங்கிய பாரதியார் அவர்களைச் செட்டிநாட்டரசர் ராஜாசர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் தம்மால் நிறுவப்பெற்ற அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்துறைப் பேராசிரியராகத் அமர்ந்து தமிழ்ப் பணி புரியவேண்டும் என விரும்பி அழைத்தார். அவர்களது அன்பார்ந்த வேண்டுகோளை மறுக்க இயலாமையாலும் தமக்கு இயல்பாகவுள்ள தமிழார்வத்தாலும் நாவலர் பாரதியாரவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைமைப்

பொறுப்பினை ஏற்று 1933 முதல் 1938 வரை மொழிப்புலத் தலைவ ராயமர்ந்து தமிழுக்கு ஆக்கமாகும் பணிகளைச் செய்தார். தமிழ்த் துறையிற் பயிலும் முதுகலை மாணவர்கட்கும் வித்துவான் மாண வர்கட்கும் தொல்காப்பியம், சங்க இலக்கியம், கம்பராமாயணம் முதலிய உயர்ந்த நூல்களைப் பாடஞ்சொல்லியும், மகாவித்துவான் ரா. இராகவையங்கார், பண்டிதமணி கதிரேசச் செட்டியார் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் முதலிய பெரும் புலவர்களை யழைத்துத் தமிழாராய்ச்சித் துறையினைத் தொடங்கி வைத்தும், காய்தலுவத்தல் அகற்றித் தமிழ் நூல்களை ஆராயும் ஆய்வு நெறிக்கு இலக்கியமாக அரிய பல ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தாமே எழுதியும் 'மாரிவாயில்' 'மங்கலக்குறிச்சிப் பொங்கல்விழா' என்னும் செய்யுள் நூல்களைப் படைத்தும் தமிழுக்கு ஆக்கந்தரும் புலமைப் பணிகளை ஆர்வமுடன் செய்தார்கள்.

நாவலர் பாரதியாரவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியராக வருவதற்குப் பல ஆண்டுகட்கு முன்னரே சிறந்த பல ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டுள்ளார்கள். தெய்வப்புலவர் திருவள்ளுவரைப் பற்றிப் பிற்காலத்தார் புனைந் துரைத்த கதையின் பொய்ம்மையினைப் புலப்படுத்தித் திருவள்ளுவரது மெய்ம்மை வரலாற்றினை யாவரும் உணர்ந்து போற்றும் முறையில் 'திருவள்ளுவர்' என்னும் ஆய்வு நூலையும், சங்க இலக்கிய ஆராய்ச்சியின் பயனாகச் 'சேரர்பேரூர்' 'சேரர் தாய முறை' என்னும் நூல்களையும், இராமாயணப்பெருங்காப்பி யத்தின் பாத்திரப்படைப்பின் வரலாற்றியல்பினைப் புலப்படுத்தும் நோக்குடன் 'தசரதன் குறையும் கைகேயி நிறையும்' என்னும் திறனாய்வு நூலையும் இவர்கள் வழக்கறிஞர் தொழிலை நடத்துங் காலத்திலேயே இயற்றியுள்ளார்கள். உலகவழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வழங்கும் புனைந்துரைக்கதைகளை அவ்வாறே நம்பி விடாமல் அவற்றின் உண்மை நிலையை நன்காராய்ந்து காய்தல் உவத்தலகற்றி அவற்றின் வன்மை மென்மைகளை உலகத்தார் உள்ளவாறு அறிந்துகொள்ளும்படி இவர்தம் ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ள திறம் அறிஞர்களால் வியந்து பாராட்டத்தகுவ தாகும். 'அனுமன் இராம தூதனா?' "பெண்மையறமும் புலமை நலமும்' முதலிய தலைப்புக்களில் நாவலர் பாரதியாரவர்களால்

எழுதப்பெற்ற கட்டுரைகள் படிப்போர் சிந்தனையைத் தூண்டி உண்மை காணும் ஊக்கத்தை வழங்கும் செறிவும் தெளிவும் அமைந்த சிறப்புடையனவாகும்.

டாக்டர் நாவலர் பாரதியார் அவர்கள், மேற்கொண்டு நிகழ்த்திய ஆராய்ச்சிகளுள் தொல்காப்பியப் பொருளதிகாரம் பற்றிய ஆராய்ச்சி இதுவரை யாவராலும் மேற்கொள்ளப்படாத அருமையும் ஆழமும் உடையதாகும். இலக்கணக் கடலனார் சோழவந்தான் அரசஞ்சண்முகனார் அவர்கள் தொல்காப்பியத்தில் எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் பற்றியே நுனித்து ஆராய்ந்தார்கள். இராங்சாகிபு மு. இராகவையங்கார் இயற்றிய 'தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி' என்னும் ஆய்வு நூல் நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்கள் இயற்றிய உரைகளின் சுருக்கமேயன்றித் தனி ஆய்வு நூலன்று. அந்நூலில் தமிழர் நாகரிகத்தொடு பொருந்தாத கொள்கைகளும், ஆரிய மலோரே தமிழர் வாழ்வியலிற் கற்பொழுக்கத்தைக் கற்பித்தார்கள் என்னும் பிழைபட்ட கூற்றுக்களும் இடம் பெற்றுள்ளமை காணலாம்.

இத்தகைய பொருந்தாக் கொள்கைகள் தமிழிலக்கிய வரலாற்றில் இடம் பெற்றுள்ளமை கண்டு வருந்திய நாவலர் பாரதியாரவர்கள் பண்டைத்தமிழ் இலக்கண நூலாகத் திகழும் தொல்காப்பியத்திற்குப் பிற்காலத்திற் குடிபுகுந்த அயலவர் கொள்கைகளையேற்றிப் பொருள் வரைந்த நச்சினார்க்கினியர் முதலிய பிற்கால ஆசிரியர்களின் உரையிலுள்ள குற்றங்களை யெடுத்துக்காட்டியும், தமிழ் மக்களது வாழ்வியலையே பொருளாகக் கொண்டு இயற்றப்பெற்ற தொல்காப்பியத்தின் தனித்தன்மையைப் புலப்படுத்தியும் தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு மெய்யுரை காணும் முயற்சியினை மேற்கொண்டார்கள்.

"பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம், ஆரியப் பாணினிக்கும், தூரிய மேற்புல யவன அரித்தாட்டிலுக்கும் முந்திய தொன்மையுடையது. பாணினியின் செறிவும் பதஞ்சலியின் திட்பமும் அரித்தாட்டிலின் தெளிவும் அவையனைத்தினும் இல்லா வளமும் வனப்பும் அளவைநூன் முறையமைப்பும் பெற்றுச்

செறிவும் தெளிவும் நெறியா நெகிழ்வும் நிரம்பியது; இத்தமிழ் நூல் பாணினிக்குப் பல நூற்றாண்டுகள் முந்தியது. வான்மீகர் பாராட்டிய கடல் கொண்ட கபாடம் அழியுமுன், அம்மூதூரில் ஆண்ட பாண்டியன் 'நிலந்தருதிருவின் நெடியோன்' காலத்தில் அவனவையை அணிசெய்த புலவருள் தலைமை தாங்கிய பெரியார், ஒல்காப் புகழுடைத் தொல்காப்பியரே தம் பெயரால் இத்தமிழ்ப் பெரு நூலை இயற்றினர் என்று அந்நூற்பாயிரம் கூறுகின்றது''

ஆசிரியர் தொல்காப்பியனார் தாம் இயற்றிய நூலிற் பலவிடத்தும் வடநூல் வழியினைத் தழுவாமல் தமிழகத்தில் தோன்றி வழங்கும் உலக வழக்கும் செய்யுள் வழக்கும் ஆகிய தமிழ் வழக்கினையே உளங்கொண்டு இந்நூலை இயற்றியதாகத் தெளிவாகக் குறித்துள்ளார். ''வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்து, வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்தும் சொல்லும் பொருளும்நாடி, செந்தமிழியற்கை சிவணிய நிலத்தொடு முந்து நூல்கண்டு முறைப்பட நாடித்'' தமிழிலக்கண மரபுகளைத் தொகுத்துரைத்தான் தொல்காப்பியன் என்னும் தவச் செல்வன்''என இந்நூற்சிறப்புப் பாயிரத்தில் ஆசிரியர் பனம் பாரனார் தெளிவாகக் கூறுதலால் இத்தொல்காப்பியத்தில் விரித்துரைக்கப்பெற்றுள்ள இலக்கண மரபுகள் யாவும் ஆரியம் என்னும் அயன்மொழித் தொடர்பின்றித் தமிழுக்கேயுரிய தனித் தன்மை வாய்ந்தன என்பது நன்கு தெளியப்படும்.

தமிழ்மொழியின் எழுத்துச் சொற்பொருள் என்னும் பாகுபாட்டின் இயற்கையமைப்பினைச் சிறிதும் சிதையவிடாது பேணிக் காக்கும் உயர்ந்த குறிக்கோளுடன் இயற்றப்பெற்ற இயற்றமிழிலக்கணமாகிய தொல்காப்பியம், பண்டைத் தமிழிலக்கியங்களின் அமைப்பினையும் பிற்காலத்தில் தோன்றிவழங்கும் பல்வேறு வகைப்பட்ட இலக்கியங்களின் வளர்ச்சிக்கு இன்றியமையாத பொருட் கூறுகளையும் தன்பாற்கொண்டு திகழும் முழுமைவாய்ந்த தமிழியல் நூலாகும். தலைச்சங்கத்து இறுதியில் தோன்றிய இந்நூல், இடைச் சங்கத்தார்க்கும் கடைச்சங்கத்தார்க்கும் இலக்கண நூலாக விளங்கிய தொன்மை வாய்ந்தது என்பதனை இறையனார்

களவியலுரையாசிரியர் முச்சங்கங்களின் வரலாறு கூறுமிடத்துத் தெளிவாகக் குறித்துள்ளார்.

ஆசிரியர் தொல்காப்பியனார் காலத்திற்குப்பின் தமிழரொடு நெருங்கிய தொடர்பில்லாத ஆரியர்கள் தமிழகத்திற் குடிபுகுந்து நாடாள் வேந்தரது ஆதரவினைப் பெற்றுத் தமிழ் மக்களொடு கலந்து தமிழரது சமுதாய வாழ்வில் படிப்படியாக மேலீடத்தைப் பெறுவாராயினர். அந்நிலையில் தமிழ் மக்களது தொன்மை நாகரிகத்தொடு பொருந்தாத ஆரியக் கொள்கைகள் சில தமிழ் மக்கள் வாழ்வில் மெல்ல மெல்ல இடம் பெறுவனவாயின. பிற்காலத்தில் இந்நாட்டில் ஆரியராற்புகுத்தப் பெற்ற வருணாச்சிரமக் கோட்பாடுகள் சில பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியத்தில் குறிப்பாகத் தொல்காப்பிய மரபியலில் இடைச்செருகலாக நுழைக்கப்பெறுவனவாயின.[1]

இங்ஙனம் தமிழகத்தின் தொன்மை வாழ்வியல் புலனாகாதவாறு ஆரிய வருணாச்சிரமக் கோட்பாடு மேலோங்கி நின்றகாலம், தொல்காப்பியவுரையாசிரியர்களாகிய இளம்பூரணர், பேராசிரியர் நச்சினார்க்கினியர் முதலியோர் வாழ்ந்த பிற்காலமாகும். இங்ஙனம் தமிழ்மக்களது வாழ்வியற் கொள்கைகள் அயலவர் கொள்கைகளால் மீதூர்ந்து மறைக்கப்பட்ட பிற்காலத்தில் தொல்காப்பியத்தின் பொருள் மரபினை உள்ளவாறு உணரும் வாய்ப்பு நாளடைவிற் குறைந்து வருவதாயிற்று. இத்தகைய இருள் நிலையிலும் தமிழ் மக்களது வாழ்வியல் நூலாகிய தொல்காப்பியத்தின் பொருளையுணர்தற்குத் தம் உரைகளாகிய ஒளிவிளக்கினையேற்றியுதவிய பெருமை இளம்பூரணர், பேராசிரியர் முதலிய உரையாசிரியர்களுக்கே உரியதாகும். இவர்களுள் இளம்பூரணர் எழுதிய உரையொன்றே தொல்காப்பியம் முழுவதற்கும் கிடைத்துள்ளது. இளம்பூரணரும் பேராசிரியரும் தமக்குமுன் உரை கண்ட பிறர் உரைகளைத் தம் உரையிற் குறிப்பிடுதலால் அவ்விருவர் காலத்திற்கு முன்னரே தொல்காப்பியத்திற்குப் பலரும் எழுதிய உரைகள் வழங்கியிருத்தல் வேண்டும் என்பது புலனாகின்றது.

---

1. தமிழிலக்கிய வரலாறு - தொல்காப்பியம் முதற்பகுதி பக்கம் 16
   ,, இரண்டாம் பகுதி பக்கம் 301–303.

தொல்காப்பியனார் வாழ்ந்த காலத்திற்கு நெடுங்காலம் பிற்பட்டுத் தோன்றிய இவ்வுரையாசிரியர்கள், தொல்காப்பியனார் தம்நூலில் விரித்துக்கூறிய தமிழியல் வாழ்வினையும் பிற்காலத்தில் தமிழ் நாட்டில் ஆரியவினத்தவராற் புகுத்தப்பட்ட வருணாச்சிரமக் கோட்பாட்டையும் பிரித்துணரும் வாய்ப்பின்றித் தம் காலச்சூழ் நிலைக்கு ஏற்பத் தொல்காப்பியப் பொருளதிகாரத்திற் சில நூற்பாக்களுக்கு உரை வரைந்துள்ளார்கள். இங்ஙனம் தமிழர் வாழ்வியலோடு பொருந்தாத கருத்துக்கள் இளம்பூரணருரையிற் சிலவாகவும் அவர்க்குக் காலத்தாற் பிற்பட்டு வந்த நச்சினார்க்கினிய ருரையிற் பலவாகவும் இடம்பெற்றிருத்தல் காணலாம். இவ்விரு வருரைகளையும் ஒப்பிட்டுப்பயில்வார்க்கு இவ்வுண்மை இனிது புலனாகும்.

இங்ஙனம் தொல்காப்பியவுரைகளில் இடம்பெற்ற அயலவர் கொள்கைகள் இன்னின்ன என இனங்கண்டு விலக்கியும் ஆசிரியர் தொல்காப்பியனார் தம் நூலில் அறிவுறுத்திய தமிழியற் கோட்பாடு கள் இவையெனத் தெளிந்து ஏதுக்களுடன் விளக்கியும் தொல் காப்பியப் பொருளதிகாரத்திற்கு மெய்யுரை காணுந்திறத்திற் புதிய உரைகாண வேண்டும் என்னும் வேட்கை 1933 முதல் 1938 வரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்துறைத் தலைவராக விளங்கிய பேராசிரியர் நாவலர் சோமசுந்தர பாரதியார் உள்ளத்தே முகிழ்ந்தெழுந்தது. அதன்பயனாகத் தொல்காப்பியப் பொருளதி காரத்தில் அகத்திணையியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் ஆகிய மூன்றியல்களுக்கு நாவலர் பாரதியார் அவர்கள் பிற்கால உரையாசிரியர்கள் கருத்தின் வழிச்செல்லாது தொல்காப்பிய மூலத்தினையே அடியொற்றிப் புதிய வுரையினை வரைந்துள்ளார் கள். பாரதியாரவர்களது புத்துரை பெரும்பாலும் இளம்பூரணர் உரையினை அடியொற்றியும் அவ்வுரையில் இடம்பெற்றுள்ள ஆரியக்கொள்கைகள் தொல்காப்பியனார் கருத்தொடு பொருந் தாமையைப் புலப்படுத்தியும் இளம்பூரணர் காலத்திற்குப்பிற்பட்ட நச்சினார்க்கினியர் தமது உரையில் வேண்டுமென்றே புகுத்திய ஆரியக்கொள்கைகளைத் தக்க காரணங்கள் காட்டி மறுத்தும் செல்லுதல் காணலாம்.

உயர்திணை மக்களது வாழ்வியலை அகம் புறம் என இரு

திறமாகப் பகுத்து விளக்கும் பொருளிலக்கண நெறியானது வேறு எம்மொழிக்கும் இல்லாது தமிழுக்கேயுரிய தனிச்சிறப்புடையதாக அமைந்திருத்தலாலும், தமிழில் வழங்கும் பொருளிலக்கணம் போன்று வரையறுத்து வடித்தமைந்த பொருளிலக்கண மரபுகள் பண்டைய வடமொழியிலக்கண நூல்களில் இடம்பெறாமையாலும், இத்தகைய பொருள் மரபு தமிழ் மொழி வளர்ச்சிக்குத் துணை செய்வது மட்டுமன்றி மக்கள் எல்லோரும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என இகலின்றிவாழும் வாழ்வியல் நெறியாகிய உலக ஒருமைப்பாட்டுணர்வுக்கும் துணைபுரியும் சிறப்புடையதாதலானும் தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு மெய்ம்மையான உரை வெளிவருதல் இன்றியமையாததாகும். தொல்காப்பியனார் காலத்தின் மெய்ம்மையான வரலாற்றுண்மைகளைத் தம்காலச் சூழ்நிலையால் மறந்தமையால், நச்சினார்க்கினியர் முதலிய பிற்கால உரையாசிரியர்கள் தாம் எழுதிய தொல்காப்பியவுரையில் வடநூல் முடிபுகள் சிலவற்றை வலிந்து புகுத்திக் கற்போரை மயங்கவைப்பாராயினர். இந்நிலையில் நாவலர் பாரதியார் அவர்கள் தமிழரது தொன்மை நாகரிக வாழ்வியல் அமைப்பினை உள்ளவாறு அறிவுறுத்தும் முறையில் கற்கும் மாணவர்களிடை யிலும் கேட்கும் அவைகளிலும் உள்ளவாறு எடுத்துக்காட்டிய தோடமையாது தமது தொல்காப்பியப் பொருட்படலப் புத்துரை யிலும் விளக்கியுரைக்கும் புலமைப்பணியினைத் தமது வாழ்க்கை யின் குறிக்கோளாகக் கொண்டார்கள். அவர்களது நன்முயற்சி அகத்திணை, புறத்திணை, மெய்ப்பாடு என்னும் மூன்றியல் களுக்கும் உரைகாணும் அளவிற் பெரும் பயன் நல்கியது. அவர் தம் முதுமைப் பருவத்தளர்ச்சியும் அவர்கள் கூறும் கருத்துக்களை உடனிருந்து எழுதி வெளியிட்டு உதவும் ஆதரவாளர் இல்லாமையும் எஞ்சிய இயல்களுக்கும் இவ்வாறு உரைவரையும் அவரது ஆர்வத்தைத் தடை செய்துவிட்டன. ஆயினும் அவர்களால், எழுதப்பெற்ற தொல்காப்பியவுரைப் பகுதிகளில் அகத்திணையியல் புறத்திணையியல் என்னும் இரண்டியல்களுக்கும் அமைந்த உரைப்பகுதிகள் தொல்காப்பியனார் காலத் தமிழ் மக்களின் தூய வாழ்க்கை நெறி முறைகளையும் அக்காலத் தமிழர் சமுதாய அமைப்பினையும் ஓரளவு வரையறுத்துத் தெளிவுபடுத்தும் முறையில் அமைந்துள்ளமை மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

வானிற் பறக்கும் பருந்தும் மண்ணிற் படியும் அதன் நிழலும் ஒன்றை யொன்று தொடர்ந்து அமையுமாறு போன்று ஒரு நூலின் மூலமும் அதற்கு எழுதப்பெற்ற உரையும் சொல்லாலும் பொருளாலும் தொடர்புடையனவாயிருத்தல் வேண்டும். மூலத்திற் குறிக்கப்படும் தொகைகள் அந்நூலின் முன்னோ பின்னோ அன்றி நூலாசிரியன் காலத்து உலக வழக்கிலேயோ நிலை பெற விளக்கப் பெற்றனவாதல் வேண்டும். இம்முறையினை உளங் கொண்டு வரையப் பெறுவதே நூலாசிரியன் கருத்தையுணர்ந்து எழுதப் பெறும் மெய்யுரையாகும். இவ்வுயர்ந்த நோக்குடனேயே நாவலர் பாதியாரவர்களும் தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்குப் புதிய வுரையினை எழுதத் தொடங்கினார்கள். அவர்தம் புத்துரையின் இன்றியமையாமையினைப் புலப்படுத்தும் சில நூற்பாக்களின் உரைநலத்தை இங்கு எடுத்துக்காட்டுதல் பொருத்தமாகும் என்று எண்ணுகின்றேன்.

பண்டைத் தமிழர் மேற்கொண்டொழுகிய அகத்திணை யென்பது, ஒத்த அன்பினராகிய ஒருவனும் ஒருத்தியும் பலபிறப் புக்களிலும் கணவனும் மனைவியுமாக ஒன்றி வாழ்ந்த நல்லூழின் ஆணையால் ஓரிடத்து எதிர்ப்பட்டுக் காதற் கேண்மையினராய் ஒழுகிப் பின் உலகத்தார் அறிய மணந்து வாழும் குடும்ப வாழ்வாகும். இவ்வொழுகலாற்றின் பொது இலக்கணம் உணர்த் துவது தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் முதற்கண்ணதாகிய அகத்திணையியலாகும். இது கைக்கிளை அன்பின் ஐந்திணை பெருந்திணை என எழுதிணையாகப் பகுத்துரைக்கப்படும். இவற்றுள் உரிமை வகையால் நிலம் பெறுவன, முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்னும் அன்பின் ஐந்திணைகளுள் நடுவணதாகிய பாலை நீங்கலாக ஏனை நான்குமேயாகும். மேற்குறித்த நானிலத்திடைப் பொதுவகையால் நிகழ்வன. கைக்கிளை, பெருந்திணை, பாலை என்பன. அவற்றுட் பாலைத்திணை, நடுவணது என வழங்கப்பட்டு முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நால்வகை யொழுக்கமும் நிகழுங்கால் அந்நான்கனுள்ளும் பிரிதற்பொருட்டாய் நிற்கும் என்னும் குறிப்புக் களும் திணைப்பாகுபாடாகிய முதற்பொருள், கருப்பொருள், உரிப் பொருள் பற்றிய விளக்கங்களும், அன்பின் ஐந்திணை யொழுகலாற்றுக்கு உரிமையுடைய தலைமக்கள் இன்னின்னார்

என்பதும், அவர்தம் உரையாடல்களில் இடம் பெறுதற்குரிய உள்ளுறையுவமம் ஏனையுவமம் பற்றிய குறிப்புக்களும், இவை போன்று அகத்திணைக்குரிய பொதுப் பொருண்மைகளும் அகத்திணையியலில் உணர்த்தப் பெற்றன. அகத்திணைக்குரிய சிறப்பிலக்கணம், களவியல், கற்பியல், பொருளியல் முதலாகப் பின்வரும் இயல்களில் விரித்து கூறப் பெற்றுள்ளன.

ஒரு திணைக்கண்ணே நிலைத்து வாழும் மக்கட் பெயர் நிலம் பற்றிய பெயரும் தொழில் பற்றிய பெயரும் என இருவகைப்படும். ஆயர் என்பது முல்லை நிலத்தில் வாழும் மக்களைக் குறித்து வழங்கும் நிலப்பெயராகும். வேட்டுவர் என்பது வேட்டைத் தொழில் புரிந்து வாழும் மக்களைக் குறித்து வழங்கும் தொழிற் பெயராகும். இவை ஆண்மக்களைக் குறித்த பெயர்கள். இவ்வாறே இவர் களோடு தொடர்புடைய பெண்மக்களைக் குறித்த பெயர்களும் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளமை காணலாம். இங்குக் குறிக் கப்பெற்றவர்களுள் அகத்திணையொழுகலாற்றிற்குரியராய் வரும் தலைவரும் உளர். இவ்வாறே குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய ஏனை நிலங்களில் வாழும் மக்கட்பெயர்களும் அகத்திணையொழு கலாற்றிற்குரிய பெயர்களாய் நீக்காது ஏற்றுக் கொள்ளப்படு வனவாம், என நானில மக்களும் நாடாளும் வேந்தனும் வேந்தராற் சிறப்புப் பெற்று உயர்ந்தோரும் அன்பினைந்திணை யொழுகலாற்றிற்குரியவராவர் என்பதனை வலியுறுத்தும் முறையில் அமைந்தன.

"ஓதல் பகையே தூதிவை பிரிவே" (தொல்-அகத்-25)
"அவற்றுள், ஓதலுந் தூதும் உயர்ந்தோர்மேன"
(மேற்படி 26)
"தானே சேறலும் தன்னொடு சிவணிய
ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே" (மேற்படி 27)
"மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையாற்
பிழைத்தது பிழையாதாகல் வேண்டியும்
இழைத்த வொண்பொருள் முடியவும் பிரிவே"
(மேற்படி 28)
"மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே"
(மேற்படி 29)

எனவரும் தொல்காப்பிய அகத்திணையியற் சூத்திரங்களாகும்.

நாடாளும் வேந்தனும் அவனொடு பொருந்திய குறுநில மன்னர் படைத்தலைவர் முதலிய ஏனையோரும், வேந்தனாற் சிறப்புச் செய்யப்பெற்று உயர்ந்தோரும் முறையே ஓதற்பிரிவு, பகைவயிற்பிரிவு, தூதிற்பிரிவு, நாடுகாவற் பிரிவு ஆகியவற்றிற்கு உரியராதலையும், வேந்தர்க்கும் வேந்தரொடு பொருந்திய ஏனையோர்க்கும் உரியனவாகச் சொல்லப்பட்ட இப்பிரிவுகள் யாவும் நானிலமக்களில் தலைவராயினோர்க்கும் உரியனவாதலை யும் இந்நூற்பாக்களில் ஆசிரியர் தொல்காப்பியனார் விரித்துக் கூறியுள்ளமை காணலாம்.

> "அவற்றுள்,
> ஓதலுந் தூதும் உயர்ந்தோர் மேன"

எனவரும் நூற்பாவுக்கு, "மேற்கூறப்பட்டவற்றுள் ஓதல் காரண மாகப் பிரியும் பிரிவும், தூதாகிப் பிரியும் பிரிவும் நால்வகை வருணத்தினும் உயர்ந்த அந்தணர்க்கும் அரசர்க்கும் உரிய" என இளம்பூரணரும், "ஓதற் பிரிவும் தூதிற் பிரிவும் அந்தணர் முதலிய மூவரிடத்தன" என நச்சினார்க்கினியரும் தம் காலத்தில் நிலவிய ஆரியவருணாச்சிரம நிலையினை உடன்பட்டு உரை வரைந்தனர். 'நான்குவருணம் ஆரியர் அறநூல்களே கூறும் வகைகளாதலானும், பண்டைத் தமிழருள் பிறப்பளவில் என்றும் உயர்வு தாழ்வுகளுடன் வேறுபடும் அந்நால்வகை வருணங்கள் உலகியலில் வழங்காமை யானும், தொல்காப்பியர் தாம் தமிழ் மரபுகளையே கூறுவதாக வற்புறுத்தலானும், அகத்திணையியலில் தமிழ் நாட்டு நானில மக்கள் குறிக்கப்படுகின்றாரன்றி நான்கு வருணத்தராய்த் தமிழ் மக்கள் யாண்டும் கூறப்படாமையானும் அவருரை அமைவுடைய தன்று" என மறுத்த பாரதியார் 'ஓதலுந் தூதும் உயர்ந்தோர்மேன' என வரும் நூற்பாவில் 'உயர்ந்தோர்' எனக் குறிக்கப்பட்டவர்கள், முற்குறித்த அடியோர், வினைவலர், ஏவல் மரபின் ஏனோர் அல்லாத நானிலத் தமிழ்க்குடி மேன் மக்களே என்பதனை இந்நூற் பாவில் தெளிவாக விளக்கியுள்ளார், இனி,

> 'மேலோர்முறைமை நால்வர்க்கும் உரித்தே'

எனவரும் நூற்பாவுக்கு, "மேலோராகிய தேவரது முறைமையை நிறுத்தற்குப் பிரியும் பிரிவு நான்கு வருணத்தார்க்கும் உரித்து"

என இளம்பூரணரும், "மேல் அதிகாரப்பட்டுநின்ற வாணிகர்க்கு ஓதிய பொருள் செயல்வகை அந்தணர்க்கும் அரசர்க்கும் இருவகை வேளாளர்க்கும் உரித்து" என நச்சினார்க்கினியரும் தம்முள் முரண்பட உரை வரைந்துள்ளனர். இங்கு 'மேலோர்' என்றது, முற்சூத்திரத்திற் குறிக்கப்பட்ட வேந்தனையும் அவனொடு பொருந்திய ஏனோரையும் சுட்டுவதாகும்; இளம்பூரணர் கூறுமாறு தேவரையோ நச்சினார்க்கினியர் கூறுமாறு வணிகரையோ 'மேலோர்' என்னும் இச்சொல் சுட்டியதென்பதற்கு இச்சூத்திரத்தின். முன்னும் பின்னும் எத்தகைய தொடர்பும் காணப்படவில்லை. இவ்வாறே இச்சூத்திரத்திலுள்ள 'நால்வர்' என்ற சொல்லும் இளம்பூரணர் கருதுமாறு நால்வகை வருணத்தாரையோ நச்சினார்க்கினியர் கூறுமாறு அந்தணர், அரசர், இருவகை வேளாளர் என்னும் நால்வகைப் பிரிவினரையோ குறித்ததெனக் கொள்ளுதற்குச் சிறிதும் இடமில்லை யென்பதும், இங்கு 'மேலோர்' என்றது வேந்தரையும் வேந்தரொடு பொருந்திய வேளிர் முதலிய ஏனையோரையும் குறித்தது என்பதும், 'நால்வர்' என்றது, அடியோர், வினைவலர், ஏவன்மரபின் ஏனோர் எனப்படும் கீழோரல்லாத நானிலத் தலைவர்களாகிய நிலமக்களைக் குறித்த தென்பதும் ஆகியவுண்மைகளை நாவலார் பாரதியார் இச்சூத்திரவுரையிற் காரணங்காட்டி விளக்கியுள்ளார்.

"மேலே, வேந்தன் என்றும் வேந்தனொடு சிவணிய ஏனோர் என்றும் மேவிய சிறப்பின் ஏனோர் என்றும் குறிக்கப்பட்ட மேலோர்களுடைய பிரிவு தமிழகத்தில் நானில மக்களுக்கும் ஒப்பவுரியன" என்பது இச்சூத்திரத்திற்கு நாவலர் பாரதியார் வரைந்த மெய்யுரையாகும். இந்நூற்பாவில் உள்ள 'நால்வர்' என்னுந் தொகைச் சொல், பிற்கால உரையாசிரியர்கள் கூறியவாறு நால்வகை வருணத்தாரைக் குறிப்பதன்று என்பதும் நாவலர் பாரதியார் கூறியவாறு நானிலத் தமிழ்க்குடிகளையே குறித்து நின்றதென்பதும்,

"பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே
நிலத்திரி பின்றஃதென்மனார்புலவர்"

(தொல்-பொருளியல் 25)

என வரும் தொல்காப்பியர் வாய்மொழியால் நன்கு தெளியப்படும். 'பரத்தையிற் பிரிவு காரணமாகப் பாணர் முதலியோரை ஊடல் தீர்க்கும் வாயிலாக அனுப்புதல், மருதநிலத் தலைவர்க்கே சிறப்புரிமையுடையதாயினும், அது நானிலத் தலைவர்கட்கும் பொதுவாக வுரியதாகும். அவ்வழிப்பிரியும் பிரிவு தாம் உறையும் நிலமாகிய ஊரைக் கடந்து நிகழ்வதில்லை'' என்பது மேற்காட்டிய நூற்பாவின் பொருளாகும். இதன்கண் 'நிலத்திரிபின்று' என வரும் சொற்குறிப்பால் இங்கு 'நால்வர்' எனக்குறிக்கப்பட்டோர் நானிலத்தலைமக்களே என்பது நன்கு புலப்படுத்தப்பெற்றுள்ளமை கூர்ந்துணரத்தகுவதாகும்.

இனி, தொல்காப்பியப் புறத்திணையியலில் வஞ்சித்திணையின் இலக்கணங் கூறுவது,

''வஞ்சிதானே முல்லையது புறனே
எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத்தலைச்சென் றடல் குறித்தன்றே''
(தொல். புறத்.6)

என வரும் நூற்பாவாகும். ''வஞ்சியாகிய புறத்திணை முல்லையாகிய அகத்திணைக்குப்புறனாம். அஃது ஒழியாத மண்ணை நச்சுதலையுடைய வேந்தனை மற்றொருவேந்தன் அஞ்சுதகத் தலைச் சென்று அடல் குறித்தது'' என இந்நூற்பாவிற்கு உரை வரைந்தார் இளம்பூரணர்.

''வஞ்சியெனப்பட்ட அகத்திணை முல்லையெனப்பட்ட அகத்திணைக்குப்புறனாம். இருபெருவேந்தர்க்கும் இடையீடாகிய மண்ணிடத்து வேட்கையானே ஆண்டுவாழ்வார்க்கு அஞ்சுதலுண்டாக, அந்நாட்டிடத்தே சென்று ஒரு வேந்தனை மற்றொரு வேந்தன் கொற்றங்கோடல் குறித்தது'' என இந்நூற்பாவுக்கு உரை வரைந்த நச்சினார்க்கினியர், ''ஒருவன் மண்ணாசையால் மேற்சென்றால், அவனும் அம்மண்ணழியாமற் காத்தற்கு எதிரே வருதலின், இருவர்க்கும் மண்ணாசையால் மேற்சேறல் உளதாகலின், அவ்விருவரும் வஞ்சிவேந்தராவரென்றுணர்க'' என விளக்கமும் கூறினார். இங்கு எடுத்துக்காட்டிய நச்சினார்க்கினியர் உரையும் விளக்கமும் தொல்காப்பியனார் கருத்தொடு முற்றிலும்

மாறுபட்டன என்பதனை நாவலர் பாரதியார் தம்முரையில் பின் வருமாறு எடுத்துக்காட்டி மறுக்கின்றார்.

''இவ்வுரை சூத்திரச் சொல்லமைதிக்கு ஏற்காததோடு வஞ்சியியல்பை இழிதகுபழிதரு பிழையொழுக்கமாகவும் பண்ணு கிறது. 'எஞ்சாமண்ணசை' என்ற தொடர், அதை அடுத்து நிற்கும் 'வேந்தனை' என்னும் இரண்டாம் வேற்றுமைச் சொல்லுக்கு நேரே அடையாய் அமைவது வெளிப்படை. அவ்வளவிற் கொள்ளாமல் அத்தொடரைப் பின்வரும் 'வேந்தன்' எனவரும் எழுவாய்ச் சொல்லுக்கும் ஏற்றி, அவன் படையெடுத்துச் செல்லுதற்குக் காரணமே மற்றவன் மண்ணிடத்து அவனுக்குள்ள வேட்கையாகும் என இவ்வுரைகாரர் விளக்குகின்றார். மன்னர் போர்கருதிப் படையெடுப்பதன் நோக்கமெல்லாம் பிறர்மண் கவரும் வேட்கைதான் எனும்கொள்கை நாகரிகவுலகம் மதிக்கும் போரறம் அழித்துப் பழிக்கு இடனாக்கும், தக்க காரணமின்றித் தவறற்ற மெலியாரின் நாட்டை வலியார் மண்வேட்கையானே படையெடுத்துச் சென்று வென்று கவர்தலே வஞ்சித்திணை யென்று கூறுவது, உயர்ந்த பழந்தமிழ் ஒழுக்கத்தைப் பழிக்கத் தகும் பிழையாக்கி முடிப்பதாகும். வலிச்செருக்கால் மெலியார் நாட்டைப் பறிப்பது உலகியலில் உண்டேனும், அதனைவெறுத்து விலக்குவதன்றி வேத்தியல் அறமாக்கி வஞ்சியொழுக்கமெனச் சிறப்பித்து ஒருதிணை வகையாக்குவது, அறனறிந்து மூத்த தொல்காப்பியர் நூற்பெருமைக்கு இழுக்காகும். அஃது அவர்கருத்தன்மை அவர் சூத்திரச் சொல்லமைப்பே தெற்றெனத் தெளிவிக்கின்றது. இச்சூத்திரத்தில், 'எஞ்சா மண்ணசையால் இரு வேந்தர், என்னாமல், 'எஞ்சாமண்ணசை வேந்தனை' என்றமைத்த தால் முன்னுரைகாரர் பொருள் தொல்காப்பியர் கருத்தன்றென்பது தேற்றமாகும்''.

''படையொடு பிறர்மேற் செல்லுதற்கு மண்ணசையே நோக்கமாயின், அது உயரொழுக்கமாகாமல் துன்பம் தவா அது மேன் மேல்வரும் இழுக்காகும். இனி, மண்வேட்கையால் தன் மெலிவு நோக்கியிருக்கும் பகைவனை வென்றடக்க முயலாமல் வாளாவிருப்பது ஆண்மையறம் அழிப்பதாகும், அதனால்

0-6:9
N87

தன்னாட்டின் மேல் தணியாத வேட்கையுடைய அறமற்ற அயல் மன்னன் வலிபெருக்கித் தன்மேல்வருமுன்னமே தக்கபடையொடு தான் சென்று அவனைப் பொருதடக்குவது அறிவும் அறனுமாகும். அதுசெய்யாதனை எஞ்சாமண்ணசையுடையான் வஞ்சத்தால் வலிமிக வளர்த்து வாய்த்த போது வந்து தடிவன் ஆகையால், காலத்தே சென்று அத்தகைய ஆசையுடையானை வென்றடக்கி ஆண்மையறம் ஆற்றுதல் போற்றத்தகும் ஒழுக்கமாகும். அவ்வொழுக்கமே பழந்தமிழர் கையாண்ட வஞ்சித்திணை. அதனையே இச்சூத்திரம் விளங்குகின்றது. இளம் பூரணரும் அதுவே கருத்தாகக் கொண்டு இச்சூத்திரத்திற்கு "ஒழியாதமண்ணை நச்சுதலையுடைய வேந்தனை வேறொரு வேந்தன் அஞ்சுதகத் தலைச் சென்று அடல் குறித்தது'' எனநேரிய உரை கூறுகின்றார்'' என நாவலர் பாரதியார் இச்சூத்திரச் செம்பொருளை இனிது விளக்கியுள்ளார்.

அளவு கடந்த மண்ணாசையுடையனாய்ப் பிறரது மண்ணைக் கவர்ந்து கொள்ளச் சோர்வுபார்த்திருக்கும் பகைமன்னன் தன்மேற் படையெடுத்து வருவதற்கு முன்பே அவன் நடுக்கமுறும்படி அவனைவென்றடக்குதற்கு ஏற்ற காலம், இடம், வலி முதலிய வற்றையெண்ணி அவனது நாட்டின் மேற் போர்கருதிப் படையுடன் மேற் சேறல் நாடாள் வேந்தனது கடமையாதலால், எஞ்சா மண் நசை வேந்தனை வேந்தன் அஞ்சுதகத் தலைச்சென்று அடுதலைக் குறித்தது வஞ்சித்திணை' என்றார் தொல்காப்பியனார். எஞ்சா மண்ணசை என்றது, வேந்தன் ஒருவன் தனது நாட்டின் எல்லையளவில் நில்லாமல் பிறவேந்தரது நிலத்தினைத் தானே கவர்ந்து கொள்ளக்கருதும் ஒழியாத பேராசையினை. இவ்வாறு மேற் செலவுக்கு இலக்காகிய வேந்தனை 'எஞ்சாமண் நசை வேந்தன்' என அடை மொழிபுணர்த்தும், அவன்மேற் படையெடுத்துச்செல்லும் வேந்தனை 'வேந்தன்' என அடை மொழியின்றியும் தொல்காப்பியனார் கூறியது, மண்ணசையாளன் கொண்டுள்ள மண்ணாசை அவன்மேற் படையெடுத்துச் செல்லும் வஞ்சி வேந்தனது நிலத்தைக் குறித்ததே என்பதனையும், இவன் அவன்மேற் படைகொடு செல்லுதலின் நோக்கம், அவன்தனது நாட்டினைக் கைப்பற்றுதற்கு முன்னமே அவனது பேராசையை ஒழித்துத் தான்அவனை வென்றடக்குதல் வேண்டும் என

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
133044
சென்னை-600 008.

எண்ணிய போரறம் பற்றிய குறிக்கோளைக்கருதியே என்ப தனையும் புலப்படுத்தும் குறிப்பினதாகும்.

இனி, பாடாண்திணையின் வகைகுறித்து நாவலர் பாரதியார் தரும் விளக்கம் இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத்தகுவதாகும். பாடாண்திணைப்பகுதி கைக்கிளையென்னும் அகத்திணைக்குப் புறனாகும். அஃது ஆராயுங்காலத்து எட்டு வகையுடையதாகும் என்பதனைப்

"பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங்காலை நாலிரண்டுடைத்தே'' (தொல்–புறத்-20

எனவரும் நூற்பாவிற் குறிப்பிடுவர் தொல்காப்பியர், புறத்திணையுள் ஏழாவதாகக்கூறப்படும் பாடாண் என்பது, புலவரது பாடுதல் வினையாகிய தொழிலையோ அவர்களாற்புகழ்ந்து பாடப் பெறும் ஆண்மகனையோ குறிப்பதன்று. புலவர்களாற் பாடப்பெறும் கழினை விரும்பிய தலைவர்கள் தம்முடைய அறிவு, திரு, ஆற்றல் ஈகை முதலிய பெருமிதப்பண்புகளை ஆளுதற்றன்மையாகிய ஒழுகலாற்றைக் குறித்து வழங்குவதே பாடாண் என்னும் சொல்லாகும். இச்சொல் வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாய்ப் புலவராற் பாடப் பெறும் தலைமக்களது ஒழுகலாறாகிய பண்புடைமையினை யுணர்த்திற்று என்பது நச்சினார்க்கினியர் கருத்தாகும்.

ஒருநிலத்திற்கு உரித்தன்றி ஒருதலைக் காமமாகி வருவது கைக்கிளையென்னும் அகத்திணையாகும். அது போல ஒரு பாலுக்கு உரித்தன்றி ஒருவரை யொருவர் யாதானும் ஒரு பயன் கருதிய வழிப் பாடப் பெறுவது பாடாண், இயற்பெயர் கூறப்படுதலும் கழிபேரிரக்கமல்லாத செந்திறத்தால் வருவதும் இவ்விரண்டற்கும் ஒக்கும், பாட்டுடைத்தலைவன் பரவலுப்புகழ்ச்சியும் வேண்டப் பாடும்புலவர்கள் பரிசிற்பொருளை வேண்டும் முறையில் அமைந்தது பாடாண்திணையாதலின், இது ஒருதலைக் காமமாகிய கைக்கிளை யென்னும் அகத்திணைக்குப் புறனாயிற்று.

குடும்ப வாழ்விலே ஒத்த அன்புடைய ஒருவனும் ஒருத்தியும் மேற்கொள்ளுதற்குரிய அன்புரிமைச் செயல்களாகிய அகவொழுக்

கங்களும், அரசியல் வாழ்விலே போர் மறவர்கள் மேற்கொள்ளுதற் குரிய வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி என்னும் அறுவகைப் புறத்திணையொழுகலாறுகளும் ஆகிய இவ்வொழுக் கங்களை நிலைக்களனாகக் கொண்டே ஒருவர் ஒருவரைப்பாடுதல் இயலும். வெட்சி முதலிய அறுவகை ஒழுகலாறுகளும் அவற்றிற்குக் காரணமாகிய உள்ளத்துணர்வுகளும் பாட்டுடைத் தலைவர்பால் நிகழ்வன. பாடாண் திணையிலோ பாடுதல்வினை புலவர்பாலும் அவ்வினைக்குக் காரணமாகிய பண்பும் செயலும் பாட்டுடைத் தலைவர்பாலும் நிகழ்வன. வெட்சி முதலிய ஆறு திணைகளும் தலைமக்களுக்குரிய பண்புகளையும் செயல்களையும் நிலைக்கள மாகக் கொண்டு தோன்றுந் தனிநிலைத் திணைகளாகும். பாடாண் திணையோ தலைமக்கள் பால் நிகழும் மேற்கூறிய திணை நிகழ்ச்சிகளைத் தனக்கு நிலைக்களங்களாகக் கொண்டு தோன்றும் சார்பு நிலைத்திணையாகும். எனவே போர் மறவர்பால் அமைவனவாகிய வெட்சி முதலிய புறத்திணைகளிலும் குற்றமற்ற அகத்திணைகளிலும் அமைந்த செயல்களாய்த் தலைமக்களுக்குரிய கல்வி தறுகண் இசைமை கொடையெனச் சொல்லப்பட்ட பெரு மிதப் பண்புகளாய்ப் புலவராற் பாடுதற்கு அமைந்த மாந்தரது ஒழுகலாறு பாடாண் திணையாகும் எனக் கொள்ளுதல் பொருத்த முடையதாகும். பாடாண் அல்லாத வெட்சி முதலிய பிற திணை களும் புலவராற் பாடப்படுவனவே எனினும், புலவராற் பாடப் பெறுதல் வேண்டும் என்னும் உள்ளக் குறிப்பு பாட்டுடைத் தலைவர்பால் தோன்றாத நிலையில் அவர்பால் தன்னியல்பில் நிகழும் போர்ச் செயல் முதலியவற்றைப் புலப்படுத்துந் திறத்தால் அவை வெட்சி முதலிய தனிநிலைத் திணைகளாம் எனவும், அச் செயல்களைக் கருவாகக்கொண்டு புலவர்கள் பாடும் போது அங்ஙனம் தாம் பாடப்பெறுதலால் உளவாகும் புகழை விரும்புங் கருத்துடன் பாட்டுடைத் தலைவர்பால் தோன்றும் உயர்ந்த உள்ளக் குறிப்பு பாடாண் என்னும் சார்பு நிலைத் திணையாம் எனவும் பகுத்துணர்தல் வேண்டும்.

நல்லறிவுடைய புலமைச் செல்வர் பலரும் உரையினாலும் பாட்டினாலும் உயர்த்துப் புகழும் வண்ணம் ஆற்றல்மிக்க போர்த் துறையிலும் அன்பின் மிக்க மனைவாழ்க்கையிலும் புகழுடன்

வாழும் நன்மக்களது பண்பின் ஆளுதற்றன்மையே தொல்காப்பிய னார் கூறிய பாடாண் திணை என்றால் பொருத்தமுடையதாகும்.

பாடாண் திணையின் எண்வகைகளிலும் முதற்கண் அமைந்த எழுவகையினை விரித்துரைக்கும் முறையில் அமைந்தது,

''அமரர்கண் முடியும் அறுவகையானும்
புகரதீர்காமம் புல்லிய வகையினும்
ஒன்றன்பகுதி ஒன்றும் என்ப'' (தொல்-புறத் 21)

எனவரும் தொல்காப்பியச் சூத்திரமாகும். ''அமரர்கண் முடியும் கொடிநிலை, கந்தழி, வள்ளி, புலவராற்றுப்படை, புகழ்தல், பரவல் என்பவற்றினும், குற்றந்தீர்ந்த காமத்தைப் பொருந்திய வகையினும் அவையிற்றின் ஒரு கூற்றின் பாகுபாடு பாடாண் திணையாதற்குப் பொருந்தும்'' என இச் சூத்திரத்திற்கு உரை வரைந்தார் இளம் பூரணர்.

''கொடிநிலை முதலிய ஆறும், கடவுட் புகழ்சியன்றிப் பாட்டுடைத் தலைவனைச் சார்த்தி வருதல், காமப்பகுதியிற்பாடும் பாட்டுடைத் தலைவனைச் சார்த்தி வருதல் என்ற இவ்விருவகை யானும் ஒருவனைப் புகழ்தலாற் பாடாண்பாட்டாயிற்று'' என்பது இளம்பூரணர்தரும் விளக்கம்.

''வெட்சி, பொதுவியல், வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி என்னும் ஏழுடன், பாடாண்திணைக்கு ஓதுகின்ற பொருட் பகுதி பலவும் தொகுத்து ஒன்றாகக் கூட்டிப் பாடாண்பகுதி எட்டு எனக் கொண்ட நச்சினார்க்கினியர், அவ்வெட்டினுள் பாடாண் திணைக்கு ஓதுகின்ற பொருட் பகுதி பலவுங் கூடிய ஒன்றினைத் தேவர்பகுதி எனவும் மக்கட்பகுதி எனவும் இரண்டாகப் பகுத்து அவ்விரண்டினுள் தேவர்க்கு உரித்தாகும் பகுதியெல்லாம் தொகுத்துக் கூறுவது இச்சூத்திரம் எனக்கருத்துரை வரைந்தார். ''பிறப்புவகையானன்றிச் சிறப்பு வகையால் தேவர்கண்ணே வந்து முடிதலுடையவாகிய அறுமுறைவாழ்த்தின் கண்ணும், அத் தேவரிடத்தே உயர்ச்சி நீங்கிய பொருள்களை வேண்டும் குறிப்புப் பொருந்தின பகுதிக் கண்ணும், மேற்பாடாண்பகுதி எனப்பகுத்து வாங்கிக் கொண்ட ஒன்றனுள் தேவரும் மக்களும் எனப்பகுத்த

இரண்டனுள் தேவர்க்குரித்தாம் பகுதியெல்லாம் தொக்கு ஒருங்குவரும் என்று கூறுவர் ஆசிரியர்'' என நச்சினார்க்கினியர் தாம் வேண்டுஞ்சொற்களை வருவித்து இச்சூத்திரத்திற்குப் பொருள்வரைந்துள்ளார். ''அமரர்கண் முடியும் அறுவகை'' எனவே பிறப்பு முறையாற் சிறந்த அமரர் வேறு, சிறப்புவகையால் அமரர் சாதியுட் சேர்துரைக்கப்படும் அறுவகையாகிய முனிவர், பார்ப்பார், ஆனிரை, மழை, முடியுடை வேந்தர், உலகு என்பன வேறு எனக் கொண்டார் நச்சினார்க்கினியர்.

இச்சூத்திரத்தில் 'அமரர்கண் முடியும் அறுவகை யானும்' எனத்தொகை சுட்டிய தொல்காப்பியனார், தாம்கருதிய அறுவகை யாவன இவையெனவிளங்க இச்சூத்திரத்தின் முன்னோ பின்னோ எவ்வாறு சுட்டியுள்ளார் என்பதனை இளம்பூரணரும், நச்சினார்க் கினியரும் தம் உரையில் எவ்விடத்தும் எடுத்துக்காட்ட வில்லை. ''அமரர்கண் முடியும் அறுவகை'' என்ற தொகைக்குத் தொல்காப் பியனார் கருத்தின் வழி வகைசுட்டாமல் உரையாசிரியர் இருவரும் தாம் கருதிய ஆறுவகைகள் இவையெனக் குறித்தனர். இவ்விருவர் உரையிலும் குறிக்கப்பட்ட அறுவகைகள் தம்முள் முரண்பட்டுள்ளமை யொன்றே அன்னோர் சுட்டிய அவ்வகைகள் தொல்காப்பியனார் கருதிய அறுவகை அல்ல என்பதனை நன்கு புலப்படுத்துவதாகும்.

இனி, நாவலர் பாரதியார் 'அமரர்கண் முடியும் அறுவகை யானும்'' எனவரும் தொல்காப்பியத் தொடர்க்கு, ''போர்மறவர் (அஃதாவது பொருநர்) பாற்சென்று அமைவனவாக முன் இவ்வியலில் விரித்து விளக்கிய வெட்சிமுதல் காஞ்சியீறான புறத்திணைவகை ஆறினும்'' எனத்தொல்காப்பிய மூலத்தை யொட்டி இடத்திற்கியையத் தெளிவான உரை வரைந்துள்ளார்.

'அமரகத்து அஞ்சாது போர் புரியும் தறுகண் மறவர்களின் தொழிலாய்ப் பொருந்தும் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி என்னும் ஒழுகலாறுகளைப் பொருளாகக் கொண்டு பாடப்பெறும் அறுவகைத் திணைப்பகுதிகளும், குற்றமற்ற அகத் திணை யொழுகலாற்றைப் பொருளாகக் கொண்டு பாடப்பெறும் காமப்பகுதியும் ஆகிய இவ்வேழு வகைகளும் பாடாண் திணையின்

ஒருசார் பொருட்கூறுகளாகப் பொருந்தும் என்பர் ஆசிரியர்' என்பது மேற்குறித்த தொல்காப்பிய நூற்பாவின் பொருளாகும். இதன்கண் குறிக்கப்பட்ட ஏழுபகுதிகளும் உலக வாழ்க்கையில் மக்கள் பலர்க்கும் உரிய வாழ்க்கைக் கூறுகளாதலின், முதன்மை வாய்ந்த இக்கூறுகளை, 'ஒன்றன்பகுதி' என முதற்கண் எடுத்துக் கூறினார் தொல்காப்பியனார். இச்சூத்திரத்தில் வந்துள்ள 'அமரர்' என்னுஞ் சொல், 'அமர்' என்பதன் அடியாகப் பிறந்த பெயராய், அமர் செய்தலையே தமது தொழிலாகக் கொண்டு வாழும் தறுகண் மறவரைக் குறித்து வழங்குந் தனித்தமிழ்ச் சொல்லாகும். இந் நுட்பம்,

> "எமரனாயின் இறைகொடுத் தகல்க
> அமரனாயின் அமைவொடு நிற்க"
> (பெருந்,–உஞ்சைக்–ரு ஏ. விழாக்கொண்டது)

எனவரும் பெருங்கதைத் தொடரால் இனிது புலனாதல் காணலாம். அமர்புரியும் படைவீரரைக் குறித்து வழங்கும் 'அமரர்' என்னும் இச்சொல், அம்மறவர் போர்க்களத்து உயிர் கொடுத்து விண்ணுல கெய்திய நிலையில் கல் நிறுத்தித் தெய்வமாக வைத்துப் போற்றப் பெறும் புகழுருவினை எய்திய பின்னர்த் தேவர் என்ற பொருளிலும் வழங்கப் பெறுவதாயிற்று எனக்கருத வேண்டியுளது,

> "ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும்
> செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற்கண்ணும்"
> (தொல்–கற்பியல்–5)

எனப்பின்வரும் கற்பியற்சூத்திரத்தில் அமரர் என்னும் இச்சொல் போரில் உயிர்துறந்து தெய்வமாய் நின்ற படை மறவர்களைக் குறித்து வழங்கியுள்ளமை இங்கு ஒப்புநோக்கியுணர்தற்குரிய தாகும்.

"போர் மறவர் பாற் சென்று அமைவனவாக இப்புறத்திணை யியலில் விரித்து விளக்கப் பெற்ற வெட்சி முதல் காஞ்சியீறாகவுள்ள புறத்திணை யொழுகலாறுகள் ஆறினையும் பொருளாகக் கொண்டு பாடப் பெறும் அறுவகைப் பகுதிகளே அமரர்கண் முடியும் அறுவகை யெனப்பட்டன" என நாவலர் பாரதியார் கூறும் உரைவிளக்கமே ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்துக்கும் தொல்

காப்பிய இலக்கணத்தின்படி பாடப் பெற்ற சங்கச் செய்யுட்களின் திணை துறையமைப்பிற்கும் பொருத்தமுடையதாக அமைந்துள்ளது. வெட்சி முதலிய அறுவகைப் புறத்திணைகளையும் நிலைக்களமாகக் கொண்டு பாடப் பெறும் பாடாண் பாட்டுக்களை முறையே வெட்சிப் பாடாண், வஞ்சிப் பாடாண், உழிஞைப் பாடாண், தும்பைப் பாடாண், வாகைப் பாடாண், காஞ்சிப் பாடாண் என வழங்குதல் பொருத்தமுடையதாகும்.

மூலநூலில் ஆசிரியர் சுட்டிய தொகைக்கு அந்நூலிலேயே வகை கூறப்பெற்றிருத்தல் வேண்டும் என எண்ணிய பாரதியார் அக்கருத்திற்கேற்பப் புதியவுரை கண்ட இடங்களும் உண்டு.

"இருவகைப் பிரிவும் நிலைபெறத் தோன்றினும்
உரியதாகும் என்மனார் புலவர்" (தொல்-அகத்-11)

எனவரும் அகத்திணையியற் சூத்திரத்தில் 'இருவகைப்பிரிவு' என்னுந்தொகை, இதற்குமுன்னுள்ள இருசூத்திரங்களிலும் குறிக்கப் பெற்ற முதுவேனிற் பிரிவும் பின்பனிப்பிரிவும் ஆகிய இருவகையினையே சுட்டி நின்றது என மிகவும் நுண்ணிதின் ஆராய்ந்து உரை வரைந்துள்ளார். முதுவேனிற் பருவத்திற் பிரிந்து சென்றதலைவர் கார்ப்பருவத்தில் மீண்டு வந்து கூடலும், பின்பனிப்பருவத்திற் பிரிந்த தலைவர் இளவேனிற் பருவத்தில் மீண்டுவந்து கூடலும் மரபு என்பதனை இச் சூத்திரம் சுட்டுவதாக நுண்ணிதின் உணர்ந்து வெளியிட்டமையும் இப்பிரிவுகட்குச் சங்க இலக்கியத்திலிருந்து எடுத்துக்காட்டுத்தந்து விளக்கியுள்ளமையும் இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கனவாம். எனினும் நூலாசிரியன் கூறிய தொகைகட்கெல்லாம் அந்நூலிலேயே வகை சொல்லப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதனை எல்லாவிடங்களிலும் நியதியாக வற்புறுத்தல் பொருத்தமாகாது. இருவகைப்பிரிவு என்பது உலக வழக்கில் நிலத்தின் வழிப்பிரிவும் கடல்வழிப் பிரிவும் என்னும் இருவகையினையும் சுட்டி வழங்குவதாகும். இவ்விரண்டினையும் முறையே காலிற் பிரிவு எனவும் கலத்திற் பிரிவு எனவும் வழங்குதல் மரபு' கால் - வட்டை; வண்டி, கலம்– மரக்கலம், இவ்வுண்மை,

"கலத்தினுங் காலினுந் தருவனர் ஈட்ட"
(சிலப்-மனையறம்படுத்த காதை 7)

எனவரும் சிலப்பதிகாரத் தொடரால் நன்கு புலனாகும். இத் தொடர்க்கு விளக்கம் கூறக்கருதிய அடியார்க்கு நல்லார், "இரு வகைப்பிரிவும் நிலைபெறத் தோன்றினும், உரியதாகும் என்மனார் புலவர்" (தொல் அகத்-11) என்பதனாற் "கலத்தினும் காலினும் என்றார்" எனக் கூறியுள்ளமை இங்கு நினைக்கத்தக்க தாகும்.

"பண்ணைத்தோன்றிய எண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நானான்கென்ப" (தொல்- மெய்ப்- 1)

என்பதும்,

"நாலிரண்டாகும் பாலுமாருண்டே" (மேற்படி 2)

என்பதும் மெய்ப்பாட்டியலின் தொடகத்திலுள்ள சூத்திரங்களாகும். இவ்விரண்டு சூத்திரங்களும் நாடகநூலார் வேண்டுமாற்றால் மெய்ப்பாட்டின் வகையினை விரித்துக் கூறுவனவாக இளம் பூரணரும் பேராசிரியரும் உரை வரைந்தனர். பண்ணை என்னும் சொல் விளையாட்டு என்னும் பொருளுடையது என்பது,

"கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு"
(தொல்-உரியியல் 23)

எனவரும் தொல்காப்பிய நூற்பாவால் இனிது விளங்கும். "விளை யாட்டாயத்தின்கண் தோன்றிய முப்பத்திரண்டு பொருளையுங் குறித்து அதன் புறத்து நிகழும் பொருள் பதினாறு என்று சொல்லுவர் ஆசிரியர்" என இவ்வியல் முதற்சூத்திரத்திற்கு உரை வரைந்த இளம்பூரணர், "முப்பத்திரண்டாவன நகை முதலான வற்றுக்கு ஏதுவாம் எள்ளல் முதலாக விளையாட்டு ஈறாக முன் பின்) எடுத்து ஓதப்படுகின்றன. அவற்றைக் குறித்த புறன் ஆவன (நகை முதலிய எண்வகைச்) சுவையும் (அவ் எண் வகைச்சுவை) குறிப்பும்" என விளக்கம் தந்தார்.

நாடகத் தமிழ் நூலார் மெய்ப்பாடு பற்றி வகுத்துக் கொண்ட கூறுபாட்டின் விரிவினையும் வகையினையும் எடுத்துரைப்பது இச்சூத்திரம் எனக்கொண்ட பேராசிரியர், "முடியுடைவேந்தரும்

குறுநில மன்னரும் முதலாயினோர் நாடக மகளிர் ஆடலும் பாடலுங் கண்டுங் கேட்டுங் காம நுகரும் இன்ப விளையாட்டினுள் தோன்றிய முப்பத்திரண்டு பொருளும் அவை கருதிய பொருட் பகுதி பதினாறாகி அடங்கும் நாடக நூலாசிரியர்க்கு'' என உரை வரைந்துள்ளார். அவர் குறித்த முப்பத்திரண்டாவன நகை முதலாகிய எண்வகைச் சுவைகளுக்கு ஏதுவாகிய சுவைப் படுபொருளும், அவற்றை நுகருங்கால் தோன்றிய சுவையுணர்வும், அதுபற்றி நுகர்வோர் உள்ளத்தே தோன்றும் மனக் குறிப்பும் அக்குறிப்பின் வழி அவரது உடம்பின் கண்ணே புலப்பட்டுத் தோன்றும் சத்துவம் எனப்படும் விறலும் ஆகும். அவற்றைக் கருதிய புறன் பதினாறு என்றது எண்வகைச் சுவை பற்றிய மனக்குறிப்புக்கள் எட்டும் அக்குறிப்பின் வழி உடம்பிற்புலப்பட்டுத் தோன்றும் விறல் (சத்துவம்) எட்டும் ஆகும் என்பது பேராசிரியர் தரும் விளக்கமாகும்.

பிறன்கோட்கூறல் என்னும் உத்திபற்றி நாடகத்தமிழ் நூலார் கொள்கைகளைத் தொல்காப்பியனார் மெய்ப்பாட்டியல் முதலிரண்டு சூத்திரங்களிலும் விரித்துக் கூறியுள்ளார் என இளம் பூரணரும் பேராசிரியரும் எழுதிய இவ்வுரைகளை நாவலர் பாரதியார் பின்வருமாறு மறுத்துரைக்கின்றார்.

''பிற்கால உரைகாரற் தொல்காப்பியருக்குக் காலத்தாற் பிந்திய வட ஆரியக் கூத்து நூல்களின் கொள்கைகளே தொல் காப்பியரும் கூறுவதாகக் கொண்டு, இவ்வியற்றமிழ்ச் சூத்திரங் களுள் வடநூல் வழக்குகளைப் புகுத்தி இடர்பட்டுச் சொல்லொடு சொல் பொருந்தா வல்லுரை வகுத்து மயங்க வைத்தனர்'' என்பது பாரதியார் கூற்றாகும். இக்கூற்று வரலாற்று உண்மைக்கு மாறுபட்டதாகவே தோன்றுகின்றது.

பாரதியார் கருதுமாறு அகத்திணை புறத்திணையொழுகலாறுகளில் மக்களது உள்ளுணர்வுகளால் இயல்பாக நிகழும் மெய்ப் பாடுகளையே செய்யுளுக்குரிய உறுப்பாகக் கொண்டு கூறுவது இயற்றமிழ் நூலாகிய தொல்காப்பியம் என்பது இளம்பூரணர் பேராசிரியர் என்னும் ஆசிரியர் இருவர்க்கும் ஒத்த முடிபாகும். இயற்றமிழுக்கு இலக்கணங் கூறப்புகுந்த தொல்காப்பியனார்,

இயற்றமிழொடு நெருங்கிய தொடர்புடையனவாய் அமைந்த இசைத் தமிழ் நாடகத் தமிழ் முடிபுகளையும் ஒப்பிட்டு விளக்கும் முறையில் பிற நூல் முடிந்தது தானுடன்படுதல் என்னும் உத்தி பற்றி வேண்டுமிடங்களில் அந்நூல் முடிபுகளை எடுத்தாளுதலை வழக்கமாகக் கொண்டுள்ளார். இச் செய்தி,

> ''அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
> உளவென மொழிப இசை யொடு சிவணிய
> நரம்பின் மறைய என்மனார் புலவர்''

(தொல். நூன்மரபு 3)

எனவும்

> ''நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
> பாடல் சான்ற புலனெறிவழக்கம்''

(தொல்-அகத் 56)

எனவும் வரும் தொல்காப்பிய நூற்பாக்களால் இனிது விளங்கும். இங்ஙனமே இயற்றமிழ்ச் செய்யுளுறுப்பாகிய மெய்ப்பாட்டுக்கு இலக்கணம் கூறப்புகுந்த தொல்காப்பியனார், மெய்ப்பாடு பற்றி நாடகத் தமிழ் நூலார் கூறுவனவற்றையும் மெய்ப்பாட்டியல் முதலிரண்டு சூத்திரங்களில் தொகுத்துக் கூறினார் என்பது இளம் பூரணர் பேராசிரியர் ஆகிய முன்னைய உரையாசிரியர்கள் கருத் தாகும்.

மெய்ப்பாட்டியலுரையில் தமிழ் நூலாகிய செயிற்றியச் சூத்திரங்களை இளம்பூரணர் மேற்கோளாகக் காட்டுதலானும், 'அதுமுதனூலை (அகத்தியத்தை) நோக்கிக் கூறியவாறு போலும்'' எனப் பேராசிரியர் நாடகத் தமிழ் நூலையே சுட்டுதலானும் ''இசைத்தமிழ் நூலாகிய பெருநாரை பெருங்குருகும் பிறவும்'' எனவும் ''நாடகத்தமிழ் நூலாகிய பரதம் அகத்தியமுதலாகவுள்ள தொன்னூல்களும் இறந்தன. பின்னும் முறுவல் சயந்தம் குணநூல் செயிற்றியம் என்பனவற்றுள்ளும் ஒருசார் சூத்திரங்கள் நடக்கின்ற அத்துணையல்லது முதல் நடு இறுதி காணாமையின் அவையும் இறந்தனபோலும்'' எனவும் சிலப்பதிகாரவுரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் இசைத் தமிழ் நாடகத் தமிழ் நூல்களின்

பெயர்களைச் சுட்டி அந்நூல்கள் முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தின் பொருட்கூறுகளையறிதற்குப் பெரிதும் துணையாவன என்பதனையும் அவையனைத்தும் தமிழ் மரபு விளக்கும் முறையில் தமிழுக்கேயுரிய நூல்கள் என்பதனையும் சிலப்பதிகார உரைப் பாயிரத்தில் குறிப்பிடுதலாலும் முன்னைய உரையாசிரியர் இருவரும் பிறன் கோட்கூறல் என்னும் உத்தி பற்றிக் குறிப்பிடும் நாடகத் தமிழ் நூல் பற்றிய மெய்ப்பாடு தமிழ் வழக்குப் பற்றிய மெய்ப்பாடாவதன்றி வடல் நூல் வழக்குப் பற்றிய மெய்ப்பாடு அன்று என்பது நன்கு தெளியப்படும். எனவே மெய்ப்பாட்டியலுக்கு இளம்பூரணரும் பேராசிரியரும் எழுதியுள்ள உரைகள் வடநூல் வழக்கினைப்புகுத்தி இடர்ப்பட்டு கற்போரை மயங்க வைப்பன அல்ல என்பது தமிழாய்வாளர் அனைவரும் தேர்ந்து தெளிய வேண்டிய உண்மையாகும்.

இதுகாறும் எடுத்துக்காட்டியவற்றால் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் நாவலர் டாக்டர் சோமசுந்தர பாரதியாரவர்கள் நுண்மாண் நுழை புலங்கொண்டு ஆராய்ந்து தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகத்திணையியல் புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் ஆகிய இயல்களுக்கு எழுதிய உரைப்பகுதிகளில் அகத்திணையியல் புறத்திணை இயல்களில் உள்ள சில நூற்பாக்களுக்கு முன்னையுரைகளில் தமிழ் மரபுக்கு மாறுபட்ட கருத்துக்களை ஏதுக்கள் பலகாட்டி விலக்கியும் அந்நூற்பாக்களில் ஆசிரியர் தொல்காப்பியனார் அறிவுறுத்திய உண்மைப் பொருள் இவையெனத் தமிழ்மரபு சிதையாதபடி மெய்யுரைவரைந்தும் ஆரியர் முதலிய அயலவர் கொள்கைக்குச் சிறிதும் இடந்தராது தமிழுக்கேயுரிய மரபுகளைப் புலப்படுத்துவதே தமிழியல் நூலாகிய தொல்காப்பியம் என்னும் பேருண்மையினை வற்புறுத்தியும் தமிழ்மக்களது தொன்மை நாகரிகத்தினையும் தமிழின் தனித்தன்மையையும் வெளிப்படுத்தியுள்ளார்கள் என்பது ஒருவாறு விளக்கப் பெற்றது.

தொல்காப்பிய ஆராய்ச்சியில் தமிழ் மாணவனாகிய என்னை ஆர்வமுடன் ஈடுபடுத்திப்பணி கொண்டு வாழ்வித்த என்னுடைய பேராசிரியப் பெருந்தகை நாவலர் பாரதியார் பெயரால் நிறுவப்

பெற்ற இவ் அறக்கட்டளைச் சொற்பொழிவுக்கு என்னை அன்புடன் அழைத்துப் பெருமைப்படுத்திய தமிழ்ப்பல்கலைக்கழகத்திற்கும் அதன் மாண்புமிகு துணைவேந்தர் அவர்கட்கும் இவ்வுரையினை அன்புடன் இருந்து கேட்டு ஊக்குவித்த அறிஞர்கட்கும் எனது உளமார்ந்த நன்றியினை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
சென்னை-600 008
33044

ஸ்ரீ வினாயகா பிரஸ், சிதம்பரம்.